**செய்தி வெளியீடு எண்: 445** **நாள்: 10.07.2018**

**<u>பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டம் –</u> காரீப் 2018 பருவத்தில் வாழை, மரவள்ளி, மஞ்சள், வெங்காயம் மற்றும் உருளைக் கிழங்கு போன்ற பயிர்களுக்கு பயிர்காப்பீடு செய்து பயனடைவீர்**

பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் காரீப் 2018 ஆம் ஆண்டு தமிழகத்தில் 28 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தோட்டக்கலைப் பயிர்களான வாழை, மரவள்ளி, மஞ்சள், வெங்காயம் மற்றும் உருளைக் கிழங்கு ஆகியவற்றிற்கு அறிவிப்பு செய்யப்பட்ட வருவாய் கிராமங்களில் காப்பீடு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில், விவசாயிகள் புயல், வெள்ளப்பெருக்கு, வறட்சி போன்ற இயற்கை இடர்பாடுகளால் வரும் இழப்பிற்கு நிவாரணம் பெறலாம். ஆகையால் விவசாயிகள் நடப்பு காரீப் பருவத்தில் (ஏப்ரல்–செப்டம்பர்) பயிர் செய்த வாழை, மரவள்ளி, வெங்காயம், உருளைக் கிழங்கு மற்றும் மஞ்சள் பயிர்களுக்குக் காப்பீடு செய்து கொள்ளலாம்.

இத்திட்டத்தில் சேர்ந்து பயன் பெற, விவசாயிகள் காப்பீட்டு பிரிமியத் தொகை, அடங்கல், ஆதார் அட்டை மற்றும் வங்கிக் கணக்கு விபரங்களுடன் அருகிலுள்ள தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை வங்கிகள், தனியார் மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் பொது சேவை மையங்களை அணுகி காப்பீடு செய்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

காரீப் 2018 பருவத்திற்கு மேற்கண்ட தோட்டக்கலைப் பயிர்களுக்கு பயிர் காப்பீடு செய்ய காலக்கெடு 01.10.2018 வரை வழங்கப்பட்டுள்ளது. கடைசி நேர நெரிசல்களை தவிர்க்க இப்பொழுதிலிருந்து பயிர் காப்பீடு திட்டத்தில் சேர்வதற்கு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தோட்டக்கலை கூடுதல் இயக்குநர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**